25th February 1969]

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த கான்சர் நோயைப் பொருத்தவரையில் கிட்டத்தட்ட ஆறு மாதத்திற்கு முன்பு ஜப்பானில் டாக்டர் இச்சிகாவா என்பவரால் பிளியோமைசின் என்ற மருந்து உபயோகிக்கப்பட்டிருக்கிறது. அந்த நாட்டில் அதைக் கொடுத்து நல்ல பலன் ஏற்பட்டிருக்கிறது. நமது மறைந்த முதலமைச்சருக்கு வந்த நோய் போன்றவைகளை அது குணப்படுத்துவதாக இருக்கின்றது. இதை நான் மருத்துவ சஞ்சிகையில் பார்த்தேன். பிறகு அதைப்பற்றி அந்த நாட்டு நிபுணருக்கு கடிதம் எழுதினேன். இந்த மருந்து நல்லமுறையில் வேலை செய்வதாக எழுதினர். அந்த மருந்தை தமிழகத்திற்கு அனுப்ப முடியுமா என்று கேட்டு எழுதியிருந்தேன். அதை இந்த அரசாங்கம் யோசித்து உபயோகத்திற்குக் கொண்டுவர ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியில் அவருக்கும் ஒரு மருத்துவ நிபுணருக்கும் ஏற்பட்ட கடிதப் போக்குவரத்துதான் தென் படுகிறது. அரசாங்கத்திற்கு அப்படிப்பட்ட எந்த தகவலும் வரவில்லை. பொதுவாக காஞ்சிபுரத்தில் நார்வேஜியின் அரசாங்க உதவியோடு உலக சுகாதார நிறுவனத்தின் துணைகொண்டு ஒரு பெரிய புற்றுநோய் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த வேலை நடந்து வருகிறது. அப்போது நல்ல சிகிச்சைக்கான நிலையம் ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Automatic Warning Signals at Level-crossings

*45 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Central Government planned for installing an automatic warning signal at railway level-crossings and asked the State Government to incur the maintenance expenditure; and

(*b*) if so, the reply sent by the Tamil Nadu Government?

இருப்புப்பாதை—சாலைக்கடவுகளுக்கு தானே இயங்கும் எச்சரிக்கை கருவிகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ரயில்வே லெவல் கிராஸிங்குகளுக்கு தானே இயங்கும் எச்சரிக்கை கருவிகள் பொருத்த மத்திய அரசு திட்டமிட்டு பராமரிப்புச் செலவை மாநில அரசு ஏற்க வேண்டும் எனக் கேட்டதா ?

(இ) ஆமெனில், தமிழக அரசு அனுப்பிய பதில் என்ன ?

[25th February 1969

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) ஆளில்லாத இருப்புப்பாதை—சாலைக்கடவுகளைத் தெரிந்தெடுத்து ஒலி யெழுப்பும் ஒரு மணியும் ஒரு சிவப்பு ஒளி விளக்கும் அடங்கிய தானியங்கி எச்சரிக்கை ஏற்பாடுகளைச் செயலுக்குக் கொண்டு வர முடிவு செய்துள்ளதாக இந்திய அரசின் இரயில்வே அமைச்சு அறிவித்தது. அதற்காகும் தொடக்கச் செலவை மாநில அரசாங்கமும் தொடர் செலவை இரயில்வே துறையும் ஏற்க வேண்டும் என்றும் இரயில்வே அமைச்சு தெரிவித்தது.

(இ) இது தற்போதைய கொள்கையையொட்டி இருப்பதால், இரயில்வே அமைச்சுக்குப் பதில் எதுவும் அனுப்ப வேண்டியதில்லை என்று கருதப்பட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, வெளிநாடு களில் எல்லாம் இந்த முறை மிகவும் வெற்றிகரமாக கையாளப் படுகிறது. அதில் நேரமும் மிச்சப்படுகிறது என்று கூறுகிறார்கள். ஆகையால் அதைப்பற்றி மத்திய அரசு எழுதியதற்கு பதில் அனுப்பாமல் இருந்த காரணம் என்ன ? இந்த முறையை கையாள அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : மத்திய அரசாங்கம் சில இடங்களைத் தேர்ந்தெடுத்து அந்த முறையை அமுல் செய்வதற்காக பரிசீலித்தது. கொள்கையளவில் அதை நாம் ஏற்றுக்கொண்டு அதற்காகும் தொடர் செலவை இரயில்வே இலாகாவும் நாமும் ஏற்றுக்கொள்வதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. அதனால்தான் பதில் எழுதவில்லை. இரண்டு அரசாங்கமும் அந்தத் தொடர் செலவை ஏற்றுக் கொள்வது என்பது ஒப்பந்தம் செய்தாகி விட்டது. அதனால் பதில் அனுப்பவில்லை.

திரு. சா. கணேசன் : இந்த மாதிரி தானியங்கி முறையில் வைத்தால் குறிப்பாக சென்னையில் அடிக்கடி நூறு தடவைக்கு குறையாமல் விளக்குகள் எலக்டிரிசிட்டி கோளாறினால் நின்று போகுமானால், அந்த தானியங்கி முறை பலன் தராமல் அதிகமான விபத்துக்கள் ஏற்படும் என்பதை கவனத்தில் கொண்டு தக்க ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: Unmanned லெவல் கிராசிங்கில் தான் அவை வைக்கப்படும். சென்னையில் அந்த மாதிரி எவையும் இல்லை. அதனால் உறுப்பினர் கருத்து பொருந்துவதாக இல்லை.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know if this Government are aware, in view of what the hon. the Leader of the Opposition has asked, that in countries like Switzerland, there are no level crossings at many places far from there being unmanned level crossings? Perhaps in the rural areas these unmanned level crossings could be removed in view of the fact that traffic is unnecessarily held up at places where there is no frequency of train service at the level crossings?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Will the hon. Member repeat the question?

25th February 1969]

THIRU A. R. DAMODARAN : What I meant was that in other countries there were no level crossings while hon. Members here were asking for provision of warnings at these level crossings. Will the Government consider removing the level crossings provided at unnecessary places in the rural areas?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : லெவல் கிராசிங் இருக்கும்போதே விபத்துக்கள் ஏற்படுகின்றன. கனம் உறுப்பினர்கள் கருத்துப்படி அவைகளை எடுத்துவிட்டால் இன்னும் அதிகமாக விபத்துக்கள் ஏற்படும்.

திரு. சி. வி. ராஜகோபால் : ரெயில்வே கிராசிங் சம்பந்தப் பட்டவரையில் ஏற்பாடு செய்வது மத்திய சர்க்கார்தானே என்று அறிய விரும்புகிறேன். இங்கே இருக்கிற சர்க்கார் அந்தக் கேட்டைத் தொடுவதற்குக் கூட முடியாது. இதில் எப்படி இவர்கள் தலையிடமுடியும் என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : கனம் உறுப்பினர் சொல்கிற கருத்து சரியானது.

South Arcot Co-operative Motor Transport Society for Ex-servicemen, Cuddalore

* 46 *Q.*—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any report has been received by the Registrar of Co-operative Societies from the President of the Board of Directors of the South Arcot Co-operative Motor Transport Society for Ex-servicemen, Cuddalore, regarding the working of the society, suggesting the supersession of the Board and the appointment of a Special Officer in view of the bad financial condition of the Society;

(*b*) whether it is a fact that a sum of Rs. 1,26,000 has been advanced as a loan by the Government to this society ; and

(*c*) whether the financial condition of the Society is sound enough to repay this loan, in view of the recurring losses, it has sustained during the past five years?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) ஆம்.

(இ) ஆம். இச்சங்கத்துக்கு இவ்வரசாங்கம் ரூ. 2,80,000 வரை கடன் வழங்கியுள்ளது.

(உ) இச்சங்கம் கடந்த ஐந்தாண்டுகளாக விரயத்தில் இயங்கி வருகிறது என்பது சரியன்று. 1964-65 வரை இச்சங்கம் ஆதாயத்தில் செயல்பட்டு வந்திருக்கிறது. அதன்பின்னர் அது விரயத்தில் செயல்பட்டு வருகிறது. அண்மைக்கால ஐந்தொகையை ஒட்டி வசூலிக்கத்தக்க சொத்துக்களையும் கொடுக்கவேண்டிய பொறுப்புகளையும் கணக்கிட்டபின்பு தான் இச்சங்கத்தின் நிதி நிலையைச் சரிவர மதிப்பிடமுடியும். எனவே அரசாங்கக் கடனை வசூலிக்க இயலாதெனச் சொல்லுவதற்கில்லை.